DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | ராமலிங்கம் |
| Father's Name | : | பசவராஜ் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | ஓட்டல் மாஸ்டர் |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 18th day of September 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது லக்கபெத்தனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஒசூர் ரயில்வே ஸ்டேசன் அருகில் உள்ள கிருஷ்ணா பவன் ஓட்டலில் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சண்முகம் என்பவரை தெரியும். 30.12.2019 அன்று மாலை 06.30 மணியளவில் விபத்தில் இறந்து போன சண்முகத்தின் அக்காவைப் பார்க்க சண்முகத்திற்கு சொந்தமான காரில் சண்முகம் ஓட்ட கந்தன், முனிரத்தினம் மற்றும் நானும் சேர்ந்து நெல்லூருக்கு போய்க் கொண்டிருந்தோம். சண்முகம் ஓட்ட நானும், முனிரத்தினமும் பின்னால் உட்கார்ந்து போய்க் கொண்டிருந்தோம். சென்னசந்திரம் கூட் ரோடு அருகே போகும் போது எதிரே வந்த கார் வேகமாக வந்து எங்கள் வண்டியின் மீது மோதியது. இவ்விபத்தில் எனக்கு வலது கால் பலத்த காயம் பட்டு கால் உடைந்து விட்டது. விபத்தில் 4 நாட்கள் கழித்து சண்முகம் இறந்து விட்டதாக சொன்னார்கள். முனிரத்தினத்திற்கு காலிலும், கந்தனுக்கு கையிலும் அடிபட்டது. இவ்விபத்தானது எதிரே வந்த காரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையால் எங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். எதிரே வந்த காரின் ஓட்டுநர் யார் என்று தெரியாது.

அடிபட்ட என்னை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்து மேல் சிகிச்சைக்காக நாதன் மருத்துவமனையில் இரண்டு வருடமும் அதன் பின் கங்கா மருத்துமவனையிலும் சிகிச்சை பெற்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

சம்பவம் நடந்தது மாலை 07.00 மணி என்றால் சரிதான். அப்பொழுது இருட்டி விட்டது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு காரும் என்ன கார் என்று தெரியவில்லை என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் இரு வாகனமும் லைட் போட்டுக் கொண்டு தான் வந்தார்கள் என்றால் சரிதான். இருட்டில் லைட் போட்டுக் கொண்டு வந்ததால் பின் இருக்கையில் இருந்ததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரியவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து யார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தனர். அரசு மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தனர். அதன் பின்பு விசாரணை செய்யவில்லை. நான் அடிபட்டதற்கு நஷ்ட ஈடு பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். சண்முகம் தான் அக்கா வீட்டிற்கு செல்லலாம் என்று அழைத்து சென்றார். யார் யாருக்கு என்ன அடிபட்டது என்றும், சண்முகம் எப்பொழுது இறந்தார் என்றும் 4 நாட்கள் கழித்து தான் தெரியும் என்றால் சரிதான்.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.